MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 31st March 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at eleven of the clock, the Temporary Speaker (SRI R. KRISHNASAMY NAIDU) in the Chair.

I.—SWEARING-IN OF MEMBERS.

TEMPORARY SPEAKER (SRI R. KRISHNASAMY NAIDU) : இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளபடி சபையின் முதல் அலுவல் 'உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்' ஆகும். இன்னும் நான்கு பேர்கள் மட்டும் உறுதிமொழி எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் இப்பொழுது இங்கு வந்து உறுதிமொழி எடுத்துக்கொள்ளலாம்.

The following Members took the prescribed oath and took their seats in the House :—

1. SRI R. Govindarajulu Naidu.
2. SRI K. Marappa Gounder.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ELECTION OF SPEAKER.

TEMPORARY SPEAKER (SRI R. KRISHNASAMY NAIDU): சபையின் அடுத்த அலுவல், 'அரசியல் அமைப்பின் 178-வது பிரிவின்கீழ் சபாநாயகர் தேர்தல்' ஆகும். சபாநாயகர் பதவிக்கான அபேட்சகர் விண்ணப்பங்கள் முன்பே தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. சட்டசபை விதிகளின் 12 (4) விதியின்படி, சபாநாயகர் பதவிக்குப் பிரேரேபிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களையும், அவர்களைப் பிரேரேபித்தவர்கள், ஆமோதித்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களையும் நான் முதலில் இந்த அவைக்கு அறிவித்தாக வேண்டும். அவை பின்வருமாறு :—

வரிசை எண்.	பிரேரேபிக்கப்பட்டவர்.	பிரேரேபித்தவர்.	ஆமோதித்தவர்.
1.	திரு. எஸ். செல்லபாண்டியன்.	திரு. எம். பக்தவத்சலம்	திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்.
2.	திரு. எஸ். செல்லபாண்டியன்.	திரு. பி. கக்கன்.	திருமதி ஜோதி வெங்கடாசலம்.
3.	திரு. எஸ். செல்லபாண்டியன்.	திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை.	திருமதி டி. என். அனந்தநாயகி.

மூன்று அபேட்சகர் விண்ணப்பங்கள் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று அபேட்சகர் விண்ணப்பங்களிலும் பிரேரேபிக்கப்பட்டவர் ஒருவரே. ஆக, ஒரு உறுப்பினர் மட்டும் சபாநாயகர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால், நான் 'திரு. எஸ் செல்லபாண்டியன் அவர்கள் இந்தச் சபையின் சபாநாயகராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறுர்' என்று அறிவிக்கின்றேன். (ஆரவாரம்.)

என்னுடைய அலுவல் இத்துடன் முடிவடைகிறது. இப்பொழுது இந்தச் சபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற கனம் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களுக்கு எனது மனமகிழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கனம் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். அவர் இந்தச் சபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பற்றி நான் மகிழ்ச்சி அடைகின்றேன். கடந்த காலங்களில் இந்தச் சட்ட மன்றத்தில் பல நல்ல சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து நல்ல மரபுகளை நாம் தோற்றுவித்திருக்கிறோம் என்பதை நான் இந்தச் சமயத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தகைய நல்ல சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து, நாம் தோற்றுவித்துள்ள நன்மரபுகளை மேலும் மேலும் வளரச் செய்ய சபாநாயகருக்கு நாம் அனுகூலமாக இருந்து, இந்தச் சட்டசபையினுடைய கௌரவத்தை நாம் எல்லோரும் மதித்து நடந்துகொள்ளவேண்டும் என்று ஞாபக மூட்டிக்கொண்டு, மறுபடியும் கனம் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கனம் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களை சபாநாயகர் பீடத்தில் அமருமாறு அழைக்கின்றேன். சபாநாயகர் தமது பீடத்தில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லோரும் தங்கள் இடத்தில் அமர்ந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கனம் திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களை சபாநாயகர் இடத்திற்கு அழைத்துவரும்படி சபை முதல்வரையும், எதிர்க்கட்சித் தலைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிறகு, சபை முதல்வராக கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்களும், சபையின் எதிர்க் கட்சித் தலைவராகிய திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் அவர்களும் கனம் சபாநாயகரை அவரது பீடத்திற்கு அழைத்துச் சென்று அமரச் செய்தார்கள். தற்காலிக சபாநாயகர், பீடத்தைவிட்டு இறங்குகையில், கனம் சபாநாயகரைக் கைகுலுக்கிப் பாராட்டினர்.

சபாநாயகர்—திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்கள் தம் பீடத்தில் அமர்ந்தார்.)